# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**<u>ஆணை நாள் 02.07.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## <u>வழக்கு எண் SA 13648/விசாரணை/E/2024</u>

| | | |
|---|---|---|
| திரு தி.விஜய் மார்த்தாண்டன் | .. | மேல்முறையீட்டாளர் |
| | */எதிர்/* | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>தலைமை மருத்துவ அலுவலர்,<br>அரசு மருத்துவமனை,<br>பரங்கிப்பேட்டை - 608 502<br>கடலூர் மாவட்டம் | .. | பொது அதிகார அமைப்பு |

******

**<u>ஆணை</u>**

1) இவ்வாணையத்தின் 30.04.2026 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து, பரங்கிப்பேட்டை அரசு மருத்துவமனயில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு கே.திலகராஜ் இவ்வாணையத்தில் 02.07.2026 அன்று ஆஜராகி. பரங்கிப்பேட்டை அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவ அலுவலரின் 29.06.2026 நாளிட்ட அறிக்கையை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

2) அவ்வறிக்கையில், ஆணையத்தின் 30.04.2026 நாளிட்ட உத்தரவில் பத்தி 4(a)-ல் கூறப்பட்டுள்ளபடி, பரங்கிப்பேட்டை மருத்துவமனையில் 2020 முதல் 2021 வரையில் 8 நாட்கள் அதிகாரிகள் ஆய்வு செய்த ஆய்வறிக்கைகளின் நகல்களை மனுதாரருக்கு அனுப்ப வேண்டுமென கடலூர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இணை இயக்குநர் 23.06.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும், அதற்கு கடலூர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இணை இயக்குநர் 25.06.2026 அன்று அனுப்பியுள்ள பதில் கடிதத்தில், “பரங்கிப்பேட்டை அரசு மருத்துவமனையில் கடந்த 2020 முதல் 2023 வரையிலான

காலக்கட்டத்தில் கடலூர் மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அவர்களால் பலமுறை ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், பெரிய குறைகள் கண்டறியப்பட்டால் மட்டுமே எழுத்து வடிவில் ஆய்வறிக்கை அனுப்பி வைக்கப்படும் என்றும், திருத்திக் கொள்ள வேண்டிய குறைகள் ஏதேனும் கண்டறியப்பட்டால் நலப்பணிகள் இணை இயக்குநர் அவர்களால் வாய்மொழி உத்தரவு மட்டுமே பிறப்பிக்கப்படும் என்பதினால் ஆய்வு தொடர்பான கோப்புகள் ஏதும் தங்கள் அலுவலகத்தில் இல்லை" என்று தெரிவித்துள்ளதாகவும், இந்த விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

3) மேலும், மேற்படி ஆணையின் பத்தி 4(b)-ல் கூறப்பட்டுள்ளபடி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை இயக்குனரின் 20.08.2025 நாளிட்ட கடிதத்தின்படி மனுதாருக்கு புரிந்துணர்வு ஒப்பந்த நகல் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, அவற்றின் நகல்களும், அதற்கான தபால் துறை ரசீதின் நகலும் இணைக்கப்பட்டுள்ளது.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், இவ்வாணையத்தின் 30.04.2026 நாளிட்ட இரண்டு உத்தரவுகளும் நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் SA 13648/விசாரணை/E/2024</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமை மருத்துவ அலுவலர்,
அரசு மருத்துவமனை,
பரங்கிப்பேட்டை - 608 502
கடலூர் மாவட்டம்

இணை இயக்குநர்,
நலப்பணிகள் அலுவலகம்,
கடலூர் மாவட்டம்

திரு தி.விஜய் மார்த்தாண்டன்
த/பெ தியாகராஜன்
எண்.30-10, சுப்பிரமணியன் தெரு,
சிதம்பரும - 608 001
கடலூர் மாவட்டம்

Copy to File
CR/PA